# புத்தம் வீடு – நாவல் ஓர் ஆய்வு

**ச.வ.சஜிரேகா**
**முனைவர்பட்டஆய்வாளர்**
**இலக்குமிபுரம்கலைமற்றும்அறிவியல்கல்லூரி**
**நெய்யூர்.**

**முன்னுரை**

ஒரு நாவலுக்கோ அல்லது சிறுகதைக்கோ கதை மாந்தர்கள் மிகவும் முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர். நேர்மையான, ஒழுக்கமான முறையில் ஒரு மாந்தர் இருப்பின் அவருக்கு எதிர்மறையாக மற்றொரு மாந்தர் இருந்தால் படிப்பவர்களுக்கு கூடுதலாக ஆர்வம் ஏற்பட வாய்ப்புண்டு 'புத்தம் வீட்டிலும்'கதை மாந்தர்கள் தங்களுடைய படைப்பின் மூலம் பல கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். அவர்களுடைய தனித்தன்மைகளின் மூலம் படிப்பவருக்கு அந்நாவலை படிக்க ஆர்வத்தைத் தூண்டுகின்றனர். கண்டிப்புடன் இருக்கும் மாந்தர் இறுதியில் எவ்வாறு மனம்மாறி தங்களுடைய தோற்றத்தை பிரதிபலிக்கின்றனர் என்பதை ஆசிரியர் தெளிவாகக் காட்டியுள்ளார்.

**நாவலில் காணப்படும் கதை மாந்தர்கள்**

1. **முதன்மை கதை மாந்தர்கள்**
   - லிஸி
   - தங்கராஜ் (லிஸியின் காதலன்)
   - கண்ணப்பச்சி
2. **துணைமை மாந்தர்கள்**
   - லிஸியின் தாய்
   - லிஸியின் சித்தி

**தாழ்வு மனப்பான்மை**

லிஸியின் தந்தை குடிப்பழக்கம் உடையவர். தனது மகளை நினைத்துக் கூட கவலைப்படாமல் தினமும் குடித்துக் கொண்டு இருப்பார். அவர் குடிப்பதற்கு லிஸியும் ஒரு காரணம். ஏனென்றால் அவள் கருப்பாய் இருப்பதால் அவளுக்கு மாப்பிள்ளை கிடைப்பது கடினம் என்றும் அவளுக்கு போட்டு அனுப்ப ஒரு பொன் கூட இல்லையென்பதும் தான். இதனால் தான் மனமுடைந்து குடிப்பதாகக் கூறி பழியை லிஸியின் மேல் போடுவார். இது லிஸிக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தியது.

லிஸிக்கு மிகவும் உறுதுணையாக இருப்பவர் அவளுடைய சித்தப்பாவும் கண்ணப்பச்சியுமே. ஆனால் சித்தப்பாவும் கூட ஒருமுறை தந்தையுடன் ஏற்பட்ட சண்டையில் தனது நிறத்தை பற்றி பேசியது அவளுக்கு மிகுந்த வலியைத் தந்தது. தனது தந்தையிடம் சித்தப்பா "வாறானா ராசா, ராசாத்தியைக் கெட்ட" அட! பொண்ணு ராசாத்தி போல இருக்கு! எலுமிச்சம் பழம் போல இருக்கு!



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

"தான் என்ன தவறு செய்துவிட்டோம் தந்தை அந்த வார்த்தைகளைக் கொட்ட காரணம் என்ன" என்று பல குழப்பங்களுடன் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்கிறாள். ஆனால் மனம் மாறி தற்கொலை முயற்சியை கைவிடுகிறாள்.

அன்று முதல் அப்பாவை நினைத்தாலே ஒருவிதமான பயம் அவள் மனதில் இருந்தது. ஆனால் தங்கராஜுக்கு அன்று முதல் லிஸியின் மீது காதல் உருவானது. சிறிது நாட்கள் வரை அவள் நினைவுகளில் இருந்த தங்கராஜ் ஒருநாள் அவளிடம் தன் காதலை கூற நினைத்துப்லிஸியிடம் பேசுகிறான். அதை லில்லி பார்த்து விட்டு லிஸியை குற்றவாளிப் போல் கேள்விகளைக் கேட்கிறாள். அன்று முதல் புத்தம் வீட்டில் பிரச்சினைகள் பல உருவாகின்றது.

தங்கராஜ் வருவதற்கு முன் இருந்த சகோதரிகளின் உறவில் விரிசல் ஏற்படுகிறது. அவனிடம் லிஸி பேசியதாக எண்ணி லில்லி கேள்விகளைக் கேட்க அது லிஸியின் மனதை பாதிக்கின்றது. தன்னை விட வயதில் சிறியவள் இத்தனைக் கேள்விகள் கேட்பதை நினைத்து உடைந்து போகிறாள். எதிலும் தன்னுடைய தவறு இல்லாமல் தான் ஏன் குற்றவாளியாக நிற்க வேண்டும் என்று கோபத்துடனும், அழுகையுடனும் லில்லியிடம் இருந்து பிரிந்து செல்கிறாள்.

அன்று முதல் இருவருக்குமிடையெ எந்தவித பேச்சுவார்த்தைகளும் இல்லை. இங்கு காதலானது உறவுகளுக்கு எதிரியாகக் காணப்படுகின்றது. லில்லி தன்னைப்பற்றி வீட்டில் சொல்லி விடுவாளா என்று தினமௌ பயந்து கொண்டிருக்கிறாள். ஒருவழியாக இது எப்படியோ வீட்டிற்கு தெரியவர சித்தப்பா தங்க்ராஜை மிரட்டுகிறார். வயது வந்த பெண்ணிற்கு திருமணம் செய்வது என்பது தெரிந்த ஒன்றே.

லிஸியும் வேறு வழியின்றி சம்மதம் தெரிவிக்கிறாள். திருமண ஏற்பாடுகள் துவங்கும் நிலையில் தான் தெரிந்தது பெண் கேட்பது அவளையல்ல லில்லியை என்று. அதற்கு காரணம் தனது அழகு தான் என்று மீண்டும் தன்னை தாழ்த்திக் கொள்கிறாள்.

மீதம் இருந்த மரியாதையும் குறைந்து வீட்டின் மூலையில் அமர்ந்து அழுகிறாள். அவளால் அழுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. இங்கு ஒரு பெண் தைரியமாக வெளியில் பேச நினைப்பதை பேச முடியாமல் அடக்குமுறையின் காரணத்தால் தன் மனதில் வைத்துக் கொண்டு புலம்புவதாக லிஸியைப் படைத்துள்ளார். இதன்மூலம் சங்ககாலத்தில் பெண்கள் எவ்வாறு இருந்தனர் என்பது தெரிகிறது.

இவற்றை மறக்கும் நிலை வருகையில் மற்றொரு சம்பவம் லிஸியை முற்றிலும் துன்பத்துக்குள்ளாக்குகிறது. அது தன்னுடைய சித்தப்பாவின் கொலை. அவரை கொலை செய்தது தங்கராஜ் என புத்தம் வீட்டிலும், ஊரிலும் பேச்சு உண்டு. முதலில் லிஸியும் அதை நம்புகிறாள். தன்னால் தான் சித்தப்பாவின் உயிர் போனது என்று நினைத்து துடிக்கிறாள்.

லில்லியோ தனது பாசமுள்ள அக்காவை ஒரு எதிரியாகப் பார்க்கிறாள். தன்னுடைய தந்தையின் கொலைக்கு லிஸி தான் காரணம் என்று லில்லியின் மனதில் பதிந்து விடுகிறது. லிஸியும் குற்ற உணர்ச்சியோடு நடந்த அனைத்தையும் நினைத்துக் குழம்பி புலம்புகிறாள். பிறகு செல்லப்பன் மூலம் நடந்த உண்மைகள் தெரிய வருகின்றன. தனது தந்தை தான் கொலை செய்திருக்கிறார். தங்கராஜ் நிரபராதி என்று தெரிந்து கொண்டு அவன் தனக்காகத் தான் இந்த தண்டனையை ஏற்றுக் கொண்டான் என்பதையும் உணருகிறாள்.

லிஸி தந்தைக்கும் மற்றவருக்கும் பயந்தவளாய் இருந்தாலும் கடைசியில் தங்கராஜ் தன்னுடன் வருமாறு அழைக்கும் போது முதலில் மறுத்தாலும் பிறகு எப்படியும் இதுதான் நடக்கும் என்று நினைத்து தானும் தங்கராஜூம் பேசுவதை அம்மா பார்த்து விட்டு புலம்பிக் கொண்டு கோபமாய் நிற்கும் போது எந்தவித பயமும் இன்றி “அம்மா எங்களை ஆசீர்வதியுங்கள்” என்று அவர் காலில் விழுகிறாள். பிறகு எப்படியோ கண்ணப்பச்சியும் சம்மதிக்க தனது காதலனை கரம் பிடிக்கிறாள்.

லிஸி தொடக்கத்தில் இருந்து பயந்தவளாகவும், தனது கோபங்களாய்யும், மனதில் எழும் கேள்விகளையும் வெளியில் வெளிப்படுத்த முடியாமல் தனக்குள் புலம்பும் பெண்ணாக ஆசிரியர் படைத்துள்ளார். ஆனால் இறுதியில் அனைத்து பயத்தினையும் உதறிவிட்டு தைரியமான பெண்ணாகக் காட்டி நாவலை முடிக்கிறார் ஆசிரியர்.

தங்கராஜ்

புத்தம் வீடு நாவலில் தொடக்கத்தில் பள்ளிப்பருவ மாணவனாக தங்கராஜ் அறிமுகப்படுத்தப்படிகிறான். “அவன் எப்போதுமே கடைசியில் இருக்கும் பிரக்கியாதியைப் பெற்றிருந்த தங்கராஜ்” என்று தொடங்குகிறார். அவனுக்கு வயது பதினான்கு இருக்கும் அவன் லிஸியைப் பார்த்தது முதலும், கடைசியுமாக அந்தப் பள்ளியில் தான். பிறகு இருவரும் இருந்த இடம் தெரியாமல் திசைமாறிப் போனார்கள்.

லிஸி பெரிய பெண் ஆகி பல நாட்கள் கழித்து தான் திடீரென தங்கராஜ் அவளைப் பார்க்கிறான். பார்த்ததும் உடனே ஏதோ ஒரு உணர்வு அவனுள் தோன்றுகிறது. அன்று முதல் அவன் லிஸியை விரும்ப ஆரம்பித்து விட்டான். கொஞ்ச நாள் வரை அந்தக் காதல் அவனுடைய மனதில் மறைக்கப்பட்டு இருந்தது.

அப்போது ஒருநாள் லிஸியின் குடும்பப் பிரச்சினையில் தங்கராஜ் தனது கருத்தைத் தெரிவிக்கும் போது லிஸியின் தந்தை அவனை “பனையேறி பயலுக்கு இங்கே என்ன வேல. உன் வேலையை பாரு” என்று கத்துகிறார்.

ஆனால் லிஸியின் தாத்தா தங்கராலின் அறிவுரையைக் கேட்கிறார். ஆனால் அது எவ்வித பலனுமின்றி முடிந்தது. அன்றிலிருந்து தங்கராஜ் மீது லிஸியின் தந்தை, சித்தப்பா, சித்தி ஆகியொருக்கு மிகுந்த கோபம் உண்டானது. பிறகு நாட்கள் பல சென்றதும் லிஸி தன்னை காதலிக்கிறாளா என்பதைத் தெரிந்து கொள்ள முயற்சிக்கும் போதெல்லாம் அவை தோல்வியில் முடிந்து லிஸிக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக ஆசிரியர் காண்பித்துள்ளார்.

லிஸிக்கு திருமண ஏற்பாடு தொடங்கி நின்றுபோன வேளையில் தங்கராஜ் லிஸியை திருமணம் செய்ய உபதேசியாரின் உதவியை நாடுகிறான். ஆனால் அவர் தன்னால் முடியாது எனகூற மனமுடைந்து வீடு திரும்புகிறான். அவன் போகும்வழியில் பல குழப்பங்கள் உண்டாகின்றன. லிஸியை எப்படியாவது திருமணம் செய்தாக வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவன் மனதில் ஓடிக் கொண்டிருந்தது.

அவன் பெண் கேட்ட விஷயம் லிஸியின் சித்தப்பாவிற்கு தெரியவர அவன் அன்பையனிடம் தன் கோபத்தை காட்டுகிறார். அன்பையன் வீட்டிற்கு வந்து தங்கராஜிடம் நடந்தவற்றைக் கேட்க அவனும் தான் லிஸியைக் காதலிப்பதை தெரிவிக்கிறான். லில்லியின் திருமணம் நடைபெறும் போது லிஸியின் தந்தைக்கு தங்கராஜ் பெண் கேட்டது தெரிய வருகிறது. உடனே அவர் “பனையேறி பயலுக்கு பெரிய இடத்து பெண் கேட்குதா” என்று கூறி அடிக்க செல்கிறார்.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

தங்கராஜூம் சற்றும் தயங்காமல் தன்னுடைய உரிமையை விட்டுக் கொடுக்காமல் பேசுகிறான். மேல் சாதியோ, கீழ் சாதியோ அவரும் மனிதன் தானே என்ற எண்ணம் அவனுக்கு. இதன் காரணமாக தங்கராஜூக்கு பெரிய வீட்டு பிள்ளைகள் என்று நினைப்பதற்கு வெறுப்பாயிருந்தது. லிஸியை பிடித்ததால் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினாள். அதற்கும் இவர்கள் கூறும் பனையேறித் தொழிலுக்கும் என்ன தொடர்பு என கோபம் கொள்கிறான். அந்த கோபத்தில் ஒரு பங்கு அவனுடைய தந்தையின் மீதும் இருந்தது. எதற்கு பயப்பட வேண்டும் என்று தந்தையை திட்டினான்.

லில்லியின் திருமணம் முடிந்ததும் லில்லியின் தந்தை கொல்லப்படுகிறார். அந்தப்பழி தங்கராஜூன் மீது போடப்படுகிறது. அவன் எவ்வளவோ கூறியும் அதை யாரும் கேட்காமல் அவனை கொலையாளி என கைது செய்கின்றனர். ஆனால் அவனுக்கு தான் அந்த கொலையை செய்யவில்லை என்றும் லிஸியின் தந்தை தான் தன் மீது பழியை போடுகிறார் என்றும் ஒளரிகிறது. இருப்பினும் மிகவும் பொறுமையாக இருக்கிறான். இந்தத் தண்டனையை பெறுமளவிற்கு தான் என்ன தவறு செய்துவிட்டோம் என்று அவன் தனக்குள் கேட்டுக் கொள்கிறான். கடைசியில் உபதேசியாரின் உதவியின் மூலம் உண்மை நிரூபிக்கப்பட்டு விடுதலை அடைகிறான்.

அவன் விடுதலை ஆனதும் லிஸியை சந்திக்க வருகிறான். எல்லா துன்பத்தையும் அனுபவித்து விட்டதால் இனி அனுபவிக்க ஏதுமில்லை என்று மிகவும் தைரியமாக லிஸியிடம் செல்கிறான். தன்னுடன் வருமாறு லிஸியை அழைக்கிறான். லிஸி தனது தாயையும் கண்ணப்பச்சியையும் காரணம் காட்ட உடனே அவன் “நீ பின்னே எதுக்கு மனுசெனப் பைத்தியமா அடிக்யே? என்று கோபமாக கேட்கிறான். ஆனால் லிஸியின் கனிவான முகத்தைக் கண்டதும் அவன் கோபம் தணிந்தது. இறுதியில் அனைவரின் ஒருவிதமான சம்மதத்துடன் லிஸியைத் திருமணம் செய்து கொள்ள தயாராகிறான்.

பொதுவாக தாழ்ந்த குடும்பத்தில் இருக்கும் எவரும் தனக்கு மேலிருப்பவரை எதிர்த்து நிற்க தயங்குவர். ஆனால் தங்கராஜ் அவ்வாறு செய்யாமல் தன்னுடைய உரிமையை விட்டுக் கொடுக்காமல் அவர்களை எதிர்த்துப் பேசுவதாக ஆசிரியர் மிகவும் அழகாகப் படைத்து உள்ளார். அதேபோல் தன்னுடைய காதலை அப்பெண்ணிடமும் மிகவும் கண்ணியமான முறையில் தெரிவிக்கும் ஒரு சிறந்த ஆண்மகனாகவும் படைத்துள்ளார்.

**கண்ணப்பச்சி**

புத்தம் வீட்டின் மிகவும் முக்கியமானவர் இவர் தான். இவருக்குக் கீழ் தான் புத்தம் வீடு இயங்கிக் கொண்டிருந்தது. ஆசிரியர் அவரை “ஒரு நல்ல நீண்ட பனைமரத்தை போல தோற்றம் உடையவர்” என்று அறிமுகப்படுத்துகிறார். புத்தம் வீட்டில் கண்ணம்மைக்கு பிறகு கண்ணப்பச்சியிடம் பேசும் உரிமை லிஸிக்கு மட்டுமே இருந்தது. அவரும் அந்த வீட்டில் யாரிடமும் பேசுவது இல்லை. அனைத்து தேவைகளும் லிஸியிடம் தான் கேட்பார். தன்னுடைய பிள்ளைகளின் மேல் இருக்கும் வெறுப்பை அவர் காறி உமிழ்வதின் மூலம் அறியலாம் என்று ஆசிரியர் கூறுகிறார்.

அனைத்திலும் மிகவும் கட்டுக்கோப்பு உடையவராய் ஆசிரியர் படைத்துள்ளார். பனையேறி மக்களை அவர் அவ்வளவு சுலபமாக மதிப்பதில்லை. ஒருமுறை தன்னை எதிர்த்து கேள்வி கேட்டதற்காக தங்கையனையும் அவனது குடும்பத்தையும் ஊரைவிட்டு அனுப்பி விட்டார். கண்ணப்பச்சி அந்த அளாவிற்கு மிகவும் கடுமையானவர்.

லிஸி பள்ளிக்குச் செல்வதில் விரும்பாதவர்களில் இவரும் ஒருவர். தன்னுடைய குறிகோளில் இருந்து சற்றும் மாறாதவராய் இருந்தார். இவ்வளவு கண்டிப்பு உள்ளவராய் இருந்தாலும் ஒருமுறை தங்கராஜ் தனது குடும்பத்திற்கு யோசனை கூற வரும்போது லிஸியின் தந்தை தங்கராஜை திட்டிய போது கண்ணப்பச்சியும் அவ்வாறு செய்யாமல் அவனுக்குப் பேச ஒரு சந்தர்ப்பம் கொடுத்தார்.

அதே போல் என்ன தான் பிள்ளைகளின் மீது கோபம் இருந்தாலும் தன்னுடைய மகன் இறந்த போதும், மூத்த மகன் கைது செய்யப்பட்ட போதும் உடைந்து போய் தனது பிள்ளைகளுக்காக கண்ணீர் வடிக்கிறார். இங்கு ஒரு சராசரி தந்தையாக ஆசிரியர் கண்ணப்பச்சியைக் காண்பிக்கிறார்.

இறுதியாக லிஸியின் திருமணத்திற்காக பேச சென்ற இடத்தில் லில்லியின் கணவர் லிஸியை தங்கராஜூடன் சேர்த்து வைக்குமாறு கூறுகிறார். முதலில் மறுத்தவர் பிறகு பிள்ளைகளின் நலன் கருதி திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கிறார். சாதி, மதம் கட்டுக்கோட்பாடுகள் நிறைந்த கண்ணப்பச்சியை முதலில் காண்பித்த ஆசிரியர் இறுதியில் மனம்மாறிய நல்லவராகக் காண்பித்துள்ளார். முதலில் அவர் மேல் இருந்த வெறுப்புகல் அனைத்தும் அவர் செய்த செயலால் மறந்து போகும்படியாக காட்சிப்படுத்திக் காட்டியுள்ளார்.

**துணைமை மாந்தர்கள்**

நாவலுக்கு முதன்மை மாந்தர்களைப் போல துணைமை மாந்தர்களும் எதிர்பார்க்கப்படுகின்றனர். அவ்வகையில் லிஸியின் தாயையும், சித்தியையும் துணைமை மாந்தர்களாக ஆசிரியர் படைத்துள்ளார்.

**லிஸியின் தாய்**

லிஸியின் தாய் மருமகளாக வரும்போது நிறாய்ய பொன்னுடன் வந்தவள். கணவன் சரியில்லாததால் வெறும் காதுகளை உடையவளாகக் காணப்படுகிறாள். பெண்ணைப் பெற்ற தாயின் உணர்வுகள் இவளிடமும் காணப்படுகிறது. குடிப்பழக்கம் உடைய பொறுப்பற்ற கணவனால் தனது பெண்ணின் வாழ்க்கை பாழாகி விடுமோ என்று புலம்புகிறாள். வரதட்சணை அதிகம் கொண்டு வந்த பெண்ணாக தன்னை வெளிப்படுத்தாமல்தனது மாமனாரின் கட்டளைகளுக்குட்பட்டு நடக்கிறாள். **“இல்லறத்தின் பெருமையும், சிறுமையும் பெண்களைப் பொறுத்து அமையும் என்பதை அக்கால மக்கள் உணர்ந்திருந்தனர் என அறியலாம்”**

திருமணம் முடிந்து வந்தது முதற்கொண்டு ஒரு பெண்ணை பெற்று அவளுக்கு திருமணம் செய்து வைக்கும் வரை ஒருநாள் கூட வீட்டின் முற்றத்திற்கு வரவேண்டும் என்று நினைக்காத பெண்ணாகக் காணப்படுகிறார். ஏனென்றால் அது புத்தம் வீட்டின் வழக்கம் என்பதை உணர்ந்து அதைக் கடைப்பிடிக்கும் குடும்ப பெண்ணாக ஆசிரியர் அவரைப் படைத்துள்ளார். வீட்டில் தனக்கு இளையவள் இருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் தானே அனைத்து வேலையையும் செய்து முடிக்கிறாள்.

தாய் என்ற உரிமையிலும், வீட்டின் மூத்த மருமகள் என்ற உரிமையிலும் தன்னுடைய ஆதிக்கத்தை ஒருபோதும் அவள் செலுத்தியதில்லை. தன்னடக்கமும், மரியாதையும் உள்ளவாறு காணப்படுகிறாள்.

வீட்டில் பல பிரச்சினைகள் எழும்போதுக் கூட அவளுடைய கருத்தைக் கூறாமல் சமையலறையே தனது இடமாகக் கொண்டு முடங்கிக் கிடக்கிறாள். தனது மகளைத் திடும் போது அவளுக்குத் துணையாக நின்று பேசி அவளுடன் சேர்ந்து தானும் திட்டு வாங்கும் தாயாகக் காணப்படுகிறாள்.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

இறுதியில் தன்னுடைய கணவன் இறந்த பிறகு மகளின் காதலை ஏற்று அவளுக்குத் திருமணமும் செய்து வைக்கும் தாயாக தன்னை வெளிப்படுத்துகிறார்.

பொதுவாக ஒருவரின் காதலினால் அந்தக் குடும்பம் பிரிந்தாலோ அல்லது உயிரிழப்பு நேர்ந்தாலோ அந்தப் பெண்ணிடம் யாரும் பேச மாட்டார்கள். எரிச்சலுடன் இருக்கும் நிலை நாம் அறிந்ததாகும். ஆனால் புத்தம் வீட்டில் லிஸியின் காதலால் தான் லிஸியின் சித்தப்பா கொல்லப்பட்டார் எனவும், வீட்டில் பிரச்சினைகள் வர லிஸி தான் காரணம் என்று தெரிந்தும், அனைவரும் லிஸிக்கு எதிராக இருந்தும் அவளுடைய தாய் மட்டும் அவளுக்கு துணையாக இருக்கிறாள். தன்னுடைய பங்கினை தகுந்த முறையில் வெளிப்படுத்தி துணைமை மாந்தராக இருக்கிறார். இவ்வகையில் ஆசிரியர் லிஸியின் தாயை துணைமை மாந்தராக மிகவும் எளிமையாக காட்டியுள்ளார்.

**எதிரியல் மாந்தர்கள்**

நாவலின் எதிர்மறையான கதைமாந்தராக லிஸியின் தந்தை காணப்படுகிறார். எப்போதும் குடிப்பவராகவும், லிஸியை தகாத வார்த்தையால் திட்டும் தந்தையாகவும் ஆசிரியர் இவரைப் படைத்துள்ளார். தனது மகள் கருப்பாக பிறந்து விட்டாள் என நினைத்து குடிக்கும் அவருக்கு தனது பெண்ணிற்காக எதையும் சேர்த்து வைக்கத் தெரியவில்லை.

அவர் குடித்துவிட்டு வரும்போதெல்லாம் அவருடைய மனைவி அழுது புலம்புவாள். ஆனால் அவரோ அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் தன் மகளை திருமணம் செய்ய சீமையிலிருந்து ராசா வருவான் என்று கூறி அவளுடைய வாயை அடைப்பார். தனது தம்பியுடன் சண்டை போடும் முரட்டு அண்ணனாக காணப்படுகிறார்.

தனது மகளை திருமணம் செய்ய வந்த மாப்பிள்ளை அவளை வேண்டாமென்றுக் கூறி தம்பி மகளைத் திருமணம் செய்தது ஆகியவற்றை மனதில் வைத்துக் கொண்டு தக்க சமயம் வரும் வரை காத்திருந்து தங்கராஜ் தனது மகளை காதலிக்கும் விவகாரம் தெரிந்ததும் அவனைக் காரணமாக வைத்து தனது தம்பியைக் கொலை செய்து அந்தப் பழியை தங்கராஜ் மீது போட்டு விட்டு தனக்கு ஒன்றும் தெரியாதது போல் நழுவி விடுகிறார்.

தனது தம்பி இறந்ததை நினைத்து அவர் சிறிதும் கலங்கவில்லை. செய்த பாவம் சும்மா விடுமா என்ன? நாட்கள் கழிந்ததும் தீராத நோயினால் படுத்த படுக்கையாகி விடுகிறார். கடைசியில் இறக்கும் தறுவாயில் உண்மைகள் அனைத்தையும் கூறிவிட்டு இறந்து விடுகிறார். ஆசிரியர் நினைத்திருந்தால் அவர் எந்த உண்மையையும் கூறாமல் தனக்கிருந்த நல்ல பெயரோடு இறப்பதாகப் படைத்திருக்கலாம். ஆனால் அவர் மனம்மாறி சாகும்போது உண்மையைக் கூறிவிட்டு இரு உள்ளங்களை இணைக்கும் நல்லவராக படைத்துள்ளார்.

**லிஸியின் சித்தப்பா**

லில்லி பிறக்கும் வரை லிஸியை மிகவும் பாசத்துடன் பார்த்துக் கொண்டவர். லிஸியின் பார்வைக்கு மிகவும் நல்லவருங்கூட. ஆனால் ஒருமுறை மட்டும் தனது அண்ணனுக்கு உறைக்க வேண்டுமென்று லிஸியை காரணம் காட்டி பேசியது லிஸிக்கு மனவருத்தத்தை அளித்தது.

தங்கராஜ் லிஸியைபெண் கேட்க வந்தாள் என்று தெரிந்ததும் மிகவும் கோபம் கொண்டு அவனை மிரட்டுகிறார். லிஸியின் மீது தவறில்லை என்று தெரிந்தும் கூட அவளை கவனிக்க ஆரம்பிக்கிறார். அது லிஸிக்கு எரிச்சலை உண்டாக்குகிறது.

தனது மனைவியின் பேச்சைக் கேட்டு சொத்தை விற்க முடிவு செய்கிறார். ஆனால் தனதுஅண்ணனின் அவசரத்தால் அது முடியாமல் போகிறது. அன்று இருவருக்குமிடையே அடிதடி அளவிற்கு சண்டை வந்துவிட்டது. லில்லியின் திருமணத்தின் போது தனது அண்ணனை எங்கும் காணவில்லை என்று தேடுகிறார். ஆனால் அண்ணனோ தன்மீது வஞ்சகத்தில் இருப்பது அவருக்குத் தெரியாது. மிகவும் பாசம் நிறைந்த உள்ளத்துடன் அவரை திருமணத்திற்கு அழக்கிறார். பிறகு சிறிது நாட்கள் கழித்து அந்த அண்ணனின் கையாலேயே கொலை செய்யப்படுகிறார்.

எவ்வளவு தான் கோபங்கள் இருந்தாலும் சுபநிகழ்ச்சியில் தனது உடன்பிறப்பு இருக்க வேண்டும்.. அண்ணன் கையால் தனது உயிர் பிரிய போகிறது என்பதை உணராத பேதை தம்பியாக ஆசிரியர் இவரை படைத்துள்ளார்.

**முடிவுரை**

கதை மாந்தர்கள் என்னும் இவ்வியலின் மூலம் நாவலில் காணப்படும் ஒவ்வொரு மாந்தர்கள் பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொருவரும் அடுத்தவரைக் காட்டிலும் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளனர் என்பதை இவ்வியல் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.லிஸியின் தந்தையை முதலில் கோபமுடையவராகவும், குடிப்பழக்கம் கொண்டவராகவும் வெளிப்படுத்திய ஆசிரியர் இறுதியில் நாவலின் திருப்புமுனைக்கு காரணமாக அவரை படைத்துள்ள விதம் சிறப்பாக உள்ளது.

**துணை நூற்பட்டியல்**

**முதன்மை நூல்**

1. ஹெப்சிபா ஜேசுதாசன் - புத்தம் வீடு, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

**துணை நூல்**

1. காஞ்சனா இரா., இலக்கியமும் உளவிய;லும், விஷ்ணுப்பிரியா பதிப்பகம், மதுரை.
2. சிவதம்பி.கா., நாவலும் வாழ்க்கையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், மதுரை.

**அடிக்குறிப்புகள்**

உஷா, சு., அற இலக்கிய சமுதாயம், நான்மணிக்கடிகை, வேலகம் வெளியீடு, 6 வீரபத்திரசாமி கோயில் தெரு, இலாசுப் பேட்டை, புதுச்சேரி 605008. பதிப்பு - 2008. நான்மணி. பா. எண். 54.